[1979 ஏப்ரல் 25

*** ஏ. நத்தம்பட்டியில் உள்ள விவசாய நாணய சங்கம்.**

வினா எண். 806—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, ஏ. நத்தம்பட்டியில் உள்ள விவசாய நாணயச் சங்கத்தில் கையாடல் ஏதும் நடந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; (அ) ஆம்.

(ஆ) நத்தம்பட்டி விவசாய சேவை கூட்டுறவுச் சங்கச் செயலாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார், வணிகக்குற்றப் புலனய்வுப் பிரிவில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, காவல் துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படவுள்ளன. கையாடல் செய்யப்பட்டுள்ள தொகையை மீளப் பெறுவதற்காக கூட்டுறவுத் துணை பதிவாளர், கூட்டுறவுச் சட்டம் 71 வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு விவசாய நாணய சங்கத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சார்ந்த எல்லா நிர்வாகிகளுக்கும் எல்லா வகையிலும் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. அங்கே விவசாய நாணய சங்கத்தின் கட்டிடத்திற்கு வாங்கப்பட்ட பொருட்களை எடுத்துக்கொண்டு போய் அவர் வீட்டிலேயே கட்டிடம் கட்டி இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளது. எவ்வளவு ரூபாய் கையாடல் செய்யப்பட்டுள்ளது? அவர்மீது இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. இன்னும் பெண்டிங்காக ஆண்டு ஆண்டாக இருந்து கொண்டிருக்கிறது. இதன்மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேற்படி கூட்டுறவு சங்கத்தினுடைய தலைவர் எம். அய்யனாத்தேவர், சங்கத்தின் செயலாளர் எ. செல்லையா ஆகியோர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இந்த முறைகேட்டில் ஏறத்தாழ 15,382 ரூபாய் இதில் தொடர்புள்ளதாக இருக்கிறது. அதுவகையில் இன்றையதினம் கடந்த 20—4—1978ஆம் நாள் ஒரு வழக்கு பதிவு செய்து அதை விரைவுபடுத்துவதற்கும் துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் முயற்சித்து வருகிறார்கள்.